I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
M.C.O.P.NO.54/2020

| | | |
|---|---|---|
| Name | : | Babu |
| Father Name | : | Dhanapal |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.12.2024

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

ம.சா.ஆ. 1 – முதல் தகவல் அறிக்கையின் நகல்

ம.சா.ஆ. 2 – பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல்

ம.சா.ஆ. 3– வாரிசு சான்றிதழின் நகல்

ம.சா.ஆ. 4– மோட்டார் வாகன விபத்து ஆய்வறிக்கை (பேருந்து)–நகல்

ம.சா.ஆ. 5– குற்ற பத்திரிக்கை–நகல்

ம.சா.ஆ.6– பேருந்து ஓட்டுனர் உரிமமத்தின் நகல்

ம.சா.ஆ.7– பேருந்தின் இன்சுரன்ஸ் பாலிசி–நகல்

ம.சா.ஆ.8.– இறந்தவரின் ஆதார் கார்டு–நகல்

ம.சா.ஆ.9–இறந்தவரின் பேன் கார்டு –நகல்

ம.சா.ஆ.10– இறந்தவரின் வங்கி கணக்கு–நகல்

ம.சா.ஆ.11–இறந்தவரின் வருமான வரி கணக்கு 2018–19, 2019–2020

ம.சா.ஆ.12– இறந்தவரின் Tamil Nadu Housing Board contractor Registration Certificate– நகல்( அசல் ஆவணத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

ம.சா.ஆ.13–இறந்தவரின் Tamil Nadu Housing Board contractor Registration Certificate– Renewal certificate–நகல்(அசல் ஆவணத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

ம.சா.ஆ.14– PWD contractor Registration Certificate of deceased–நகல்(அசல் ஆவணத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

ம.சா.ஆ.15– PWD contractor Registration Certificate of deceased– renewal certificate of every year–நகல்(அசல் ஆவணத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

ம.சா.ஆ.16– Vellore district education officer, school management acceptance letter of the deceased –நகல்(அசல் ஆவணத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டது)

## குறுக்கு விசாரணை

என் மகனுக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் அவரிடம் இருந்தது. எங்களுடைய மோட்டார் வாகன விபத்து ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் அதில் எங்களுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்று குறிப்பிட பட்டுள்ளது என்றாலும் அதனால்தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எங்களுடைய ஓட்டுனர் உரிமம் காணாமல் போனதற்கு பிறகு புதிதாக மனு செய்து வாங்கினோமா என்றால் இல்லை. எனக்கு 60 வயதாகிறது. அந்த தேதியில் எனக்கு பின்னால் ஒருவரை வைத்து ஓட்டுவது சிரமம் என்றால் சரியல்ல. தற்போது தான் 60 வயது. சம்பவம் 2019 ல் நடந்தது. எனனுடைய அவிடவிட்டில் எதிரில் வண்டி வந்தது என்றும் பிரேக் போட்டேன் கன்ட்ரோல் செய்ய முடியவில்லை என்றும் எனவே தடுமாறி கீழே விழுந்து விட்டோம் என்றால் சரிதான். நான் எந்த பக்கம் போனேன் என்றால் நாங்கள் தொரப்பாடியிலிருந்து வேலூருக்கு இ,டது ஓரமாகதான் போய் கொண்டிருந்தேன். பையன் குறுக்கே வந்ததால் பிரேக் அடித்தேன். தொரப்பாடி டூ வேலூர் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். நான் போகும் போது வாகனங்க்ள சாலையல் முன்னால் பின்னால் வந்தது என்றால் சரிதான். இந்த விபத்து நடந்த இடம் பிஸியான இடம் என்றால் சரிதான். காலை 09.00 லிருந்து 09.30 மணி இருக்கும். அங்கு வாகனங்கள் நானும் சரி மற்றவர்களும் வேகமாக ஓட்ட முடியாது என்றால் நாங்கள் சாதாரணமாகதான சென்றோம். பிஸியான நேரத்தில் வேகமாக ஓட்ட முடியாது என்றால் சரியல்ல். நான் வேகமாக தான் போனேன் என்றால் சரியல்ல. எதிரில் வந்த பஸ்ஸின் பின் டயர்தான் என்னுடைய மனைவியின் மீது ஏறியது என்றால் சரிதான். அந்த பேருந்தின் எண். AP 16 TB 0106.நான் நிலை தடுமாறி விழுவதற்கு முன்பாகவே பேருந்து என்னை தாண்டி சென்று விட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் நடந்தது என்றாலும் பேருந்து மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல. என் மனைவி இறந்ததற்கு காரணமே

நான்தான் என்றால்சரிதான். நான் பி,ஏ Economics படித்துள்ளேன். என்னுடைய மனைவி SSLC படித்துள்ளார். PWD Contract வேலைகளை நான் தான் பார்த்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிதான் பார்த்து கொண்டார். நான் உடன் செல்வேன். என் மனைவி பெயர் மட்டும் தான் இருந்தது என்றாலும் நான் தான் அனைத்தும் செய்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் contractor என்றால் ன் மனைவியுடன் சேர்ந்து செய்து வந்தேன். தற்போது செய்வதில்லை. நான் 2018-2019 முன்பு வருமான வரி கணக்கு தாக்கல் செய்திருக்கிறேன். ஆனால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. Ex.P. 11 ரூ. 4,68,000 என்றால் சரிதான், ஆனால் 2019-2020 ல் 9,54,000 எனறு காட்டுகிறேன். என் மனைவி பெயரில் தான் தந்த வேலை தான். 2019-2020 ல் கட்டிய வருமான வரி என் மனைவி இறந்தபிறகு தாக்கல்செய்தது என்றால் சரிதான். நான் வேண்டுமேன்று இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக அதிமாக உயர்த்தி வரி செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் னுடைய வருமானத்தை காண்பிப்பதற்கு வருமான ஆவணம் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். Contract work வந்தால் வருமானம் வரும் என்றால் சரிதான். நான் 2017-2018 ல் வருமான வரி தாக்கல் செய்யதாதற்கு காரணம் அந்த வரடத்தில் ஒப்பந்த வேலை இல்லாதது தான் காரணம் என்றால் சரியல்ல. என்னுடைய ஆடிட்டர் தேவதாஸ் ஆவார். அவர்தான் தற்போதும் ஆடிட்டர். 2019-2020- ல் தேவதாஸ் கையைழுத்து போடவில்லை என்றால் சரிதான். ( சாட்சி சொல்கிறார் அவர் சீனியரிடம் வாங்கி கொடுத்துள்ளார், அந்த சீனியர் யார் என்று தெரியாது.. சீனியர் பெயர் நந்தகுமார்) அவரிடம் வாங்கி கொடுத்தார். 2019-2020 வருமான வரி ஆவணம் நாங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய வருமான வரி கணக்டகை தவிர வேறு எந்த ஆவணமும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் நடந்தது என்றாலும நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றாலும் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2024.12.04 18:02:42 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.